**"மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும் மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது, பலவீனப்படுகிறதற்காவது ஏதுவா யிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்."**

**- ரோம 14 : 21**

சகோதரரில் ஒருவனை இடறும்படி செய்வது (மத் 18 : 6) அன்பின் பிரமாணத்துக்கு எதிரான ஒரு மிகவும் கடுமையான குற்றமும் கர்த்தரின் கட்டளைக்கு எதிரானதாகவும் இருக்கிறது. ஆனால், நாம் மற்றவர்களை இடறசெய்தலும், அதாவது அவர்களை சகோதரராவதிலிருந்தும் விசுவாச வீட்டாரின் அங்கத்தினராவதிலிருந்தும் தடுப்பது அவருடைய பார்வையில் ஒரு குற்றமாகும். ஆகையால் அறிவு நம்முடைய மனசாட்சியிலுள்ள எல்லா தடைகளையும் நமது சுதந்தரத்தின் எல்லாக் கட்டுபாடுகளையும் அப்புறப்படுத்தினாலும், நாம் உபயோகிப்பதற்கு முன்பு, அந்த சுயாதீனத்தை அன்பு முதலில் அங்கீகரிக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. அன்பு இவ்விதமாகச் சொல்லி ஒரு உறுதியான கட்டளையை நமக்குக் கொடுக்கிறது. கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடு அன்பு கூருவாயாக, உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக. ஆகையால் அறிவுமல்ல, சுயாதீனமுமல்ல, அன்பே முடிவாக எல்லா கேள்விக்கும் தர்க்கத்துக்கும் தீர்ப்புக் கூற வேண்டியதாயிருக்கிறது.

**- Z ’03, 43 (R 3144).**

பலமுள்ளவர்கள் பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும். சந்தோஷமாக தங்களுடைய இயல்பான காரியங்களிலுள்ள முன்பாத்தியதையை பலவீனருடைய ஆவிக்குரிய நன்மைகளின் சார்பாக கைவிட வேண்டும். கிறிஸ்து அந்த நபருக்காக மரித்திருக்க அவரை இடறப்பண்ணுகிறேனே என்ற எண்ணம், பலவீனமுள்ள சகோதரனுக்கு நஷ்டம் உண்டாகும் வழியில், தான் அனுபவிப்பதை வெற்றிகரமாகத் தடுக்கும். ஆம், அப்படிப்பட்ட ஒருவர் ஒருபலவீனமுள்ள சகோதரனுக்கு தீங்கு உண்டாக, தான் அனுபவிப்பதைப் பார்க்கிலும், அந்த சகோதரனை காப்பற்ற சந்தோஷமாக ஜீவனைக் கொடுப்பார்.

**- P '34, 63.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

ரோம 14; 1கொரி 8; ரோம 15:1-3; 1தீமோ 4:3,4; கொலோ 2:16; 1கொரி 9:10,22; 10:23,24,31-33; 13:5; 1பேது 4:2; 2கொரி 5:15; பிலி 2:4,5; மத் 13:44-46; 16:24,25; அப் 20:22-24.

**கோபுர வாசிப்பு :** Z ’11, 424 (R 4919)

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தின் அனுபவங்கள் எவை? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அதில் உதவியாக அல்லது இடையூறாக இருந்தது எது? அவை எதில் முடிந்தன?